**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.110/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW-1 | Village: |
| Name : சுவாதி | Age :35 |
| Father's/Husband's Name : பிரகாஷ் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 02.04.2025**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து விசாரணை பதியப்படுகிறது.

**1வது எதிரி ஆஜரில் இருந்தார். 2 முதல் 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும், 2018 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2, 3 எதிரிகள் தொடர்ந்து என்னிடம் நீ என்னதான் கொண்டு வந்தாய் என்று கேட்டு என்னையும் குழந்தையையும் பார்த்துகொள்ளவில்லை என்பதால் நான் குழந்தையுடன் மீண்டும் அபுதாபிக்கு சென்று எனது கணவரின் அலுவலகத்திற்கு சென்றேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். அதேபோல் நான் அபுதாபி சென்ற அன்றே கணவர் இந்தியா திரும்பி வந்துவிட்டார் என்றும் அவரது நண்பர் மூலம் நான் டிக்கெட் புக் செய்து

அன்று இரவே நானும் இந்தியா வந்துவிட்டேன் என்றும், அதன் பின் 4 நாட்களில் எனது கணவர் அபுதாபி சென்றுவிட்டார் என்றும் புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மாமா அருணகிரிநாதனின் நண்பர் அபுதாபியிலிருந்து போன் செய்து எனது கணவரை வேறு ஒரு பெண்ணுடன் பார்த்ததாக தகவல் கூறியதாக புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் 1 முதல் 3 எதிரிகள் என்னை கெட்ட வார்த்தை சொல்லி எனது கேரக்டரை மோசமாக பேசி திட்டியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் 20.12.2019ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் எனது கணவர் என்னை கன்னத்தில் அறைந்தார் என்றும் 2ம் எதிரி எனது முடியை பிடித்து இழுத்தார். 3ம் எதிரி கையால் என் முதுகில் அடித்தார் என்றும் மேலும் மூவரும் என்னிடம் இப்போதே எனது வீட்டிலிருந்து ரூ.10 லட்சம் பணம் வாங்கி வரவேண்டும் என்றும் இல்லை என்றால் நாளைக்கே ரம்யாவை வரவழைத்து கூடவே இருக்க வைப்போம் என்றும் சொன்னார்கள் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் நான் உடனே எனது சித்தப்பாவுக்கு போன் செய்து தகவல் சொன்னேன் என்றும் மறுநாள் 21.12.2019ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் 4ம் எதிரி ரம்யா மற்றும் 5ம் எதிரி வசந்தா ஆகியோர் வீட்டிற்கு வந்துவிட்டார்கள் என்றும் எதிரிகள் 5 பேரும் சேர்ந்து என்னை முடியை பிடித்து இழுத்து முதுகில் அடித்து கதவில் இடித்து வீட்டிலிருந்து என்னை வெளியே தள்ளிவிட்டார்கள் என்றும் பின்னர் எதிரிகள் என்னை பார்த்து நீ இருப்பதனால்தான் பிரச்சனை வருகிறது. நீ இல்லையென்றால் 1ம் எதிரியை 4ம் எதிரியுடன் சேர்ந்து வாழ வைப்போம் என்றும் கொலை

செய்து விடுவதாகவும் மிரட்டினார்கள் என்றும் அப்போது அங்கு வந்த எனது சித்தப்பா என்னை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள மேற்படி விவரங்கள் எதையும் புகார் மனு மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் முதல்முறையாக நீதிமன்றத்தில்தான் சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

4. நான் எந்த தேதியில் எதிரிகளின் வீட்டிற்கு சென்றேன் என்றால் 13.12.2019 ம் தேதி சென்றேன். யார் யார் சென்றோம் என்றால் எனது சித்தப்பா லோகசித்திரன் என்னை அழைத்து சென்று அங்கு விட்டு வந்தார். அதிலிருந்து எத்தனை நாட்கள் அங்கிருந்தேன் என்றால் சுமார் 1 வார காலம் 20, 21 ம் தேதி எதிரிகள் என்னை அடித்து வெளியே தள்ளும் வரை அங்கிருந்தேன். 13.12.2019 ம் தேதி முதல் 21.12.2019 ம் தேதி வரை நான் எதிரிகளின் வீட்டில் இருந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. அந்த 1 வார காலம் அங்கிருந்தேன் என்பதை காட்டுவதற்கான ஆதாரம் எதுவும் கொடுக்க முடியுமா என்றால் அங்கிருந்தபோது பிரச்சனை ஏற்பட்டதால்தான் புகார் கொடுத்துள்ளேன். அக்கம்பக்கத்தில் வசித்து வருபவர்களுக்கு நான் 1 வார காலம் வந்து தங்கியிருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

5. எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிணை மனுவில் நான் இடையீட்டு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன் எண் Crl.O.P. (MD)No.1111/2021 என்றால் சரிதான். அந்த மனு பாரா 11 ல் இந்த வழக்கு சம்பவம் குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் 4, 5 எதிரிகள் சம்பவ சமயத்தில் இருந்ததாகவோ என்னை தாக்கியதாகவோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அந்த பாராவில் சொல்லவில்லை. இந்த சம்பவம் குறித்து நான் மேற்படி மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் லுக்அவுட் நோட்டீஸ் கோரி Crl.O.P. (MD)No.17812/2021 என மனு தாக்கல் செய்தேனா என்றால் மனு தாக்கல் செய்தேன்

ஆனால் அதன் எண் ஞாபகமில்லை. அதனுடன் பிரமாண பத்திரிக்கையும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் 20.12.2019 ம் தேதி 1 முதல் 3 எதிரிகள் ரூ.10,00,000/- கேட்டதாக அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது 20.12.2019 ம் தேதி 1 முதல் 3 எதிரிகள் ரூ.10,00,000/- பணம் கேட்டு என்னை துன்புறுத்தியதாகவும் மறுநாள் அனைத்து 1 முதல் 5 எதிரிகள் என்னை தாக்கியதாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி நான் அபுதாபி சென்று குழந்தையுடன் 1ம் எதிரியுடன் சுமார் 6 மாத காலம் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு சேர்ந்து வாழ்ந்த காலத்தில்தான் ரூ.10,00,000/- கேட்டதாக மேற்படி பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் அதில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே எதிரிகள் ரூ.10,00,000/- கேட்டதைதான் அதன் தொடர்ச்சியாக மேற்படி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு தொடர்ச்சியாக குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை தாக்கியதாக சொன்னதில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. எனது காயத்திற்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் முதலில் திருப்பனந்தாள் அரசு மருத்துவமனை சென்றேன். அங்கு மருத்துவர் இல்லை என்பதால் கும்பகோணத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு எனது சித்தப்பா அழைத்து சென்றார். அங்கு சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அந்த மருத்துவமனையில் பெயர் தற்போது ஞாபகமில்லை. மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலிசார் கேட்காததால் நான் சொல்லவில்லை. அவ்வாறு நான் காயம்பட்டதாக புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7. நான் வழக்கு சம்பவத்திற்கு பிறகு எதிரிகள் மீது மதுராந்தகம் நீதிமன்றத்தில் டிவிசி.2/2024 என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாக்கல் செய்த மனுவில் இந்த வழக்கு சம்பவம் பற்றி சொல்லியுள்ளேன். அதில் 1ம் எதிரி தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் 5 பேரும் தாக்கியதாகதான் சொன்னேன். நான் சொல்வதுபோல 20.12.2019 மற்றும் 21.12.2019 ம் தேதிகளில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் என்னை தாக்கவில்லை என்றாலும் பணம் எதுவும் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தொடர்ச்சியாக எதிரிகள் மீது பல்வேறு வழக்குகள், மனுக்கள் பொய்யாக தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான்தான் 1ம் எதிரியுடன் மாண்புமிகு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியும் அவருடன் சேர்ந்து வாழாமல் உள்நோக்கத்துடன் 1ம் எதிரி மீதும் மற்ற எதிரிகள் மீதும் பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குகள், மனுக்கள் அனைத்திலும் முன்னுக்குபின் முரணாக பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(4, 5 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுவதாக கூறப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.)

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2025.04.02 18:30:08 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**